**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *கலாத்தியர் – பாடம் 08*

# *தன்னுடைய அபோஸ்தல அழைப்பை பாதுகாத்தல் – மன மாற்றத்திற்குபின்*

***கலாத்தியர் 1:17-20, எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்; அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்.*** *18.* ***மூன்று வருஷம் சென்ற பின்பு, பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன்.*** *19.* ***கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை.*** *20.* ***நான் உங்களுக்கு எழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று தேவனுக்குமுன்பாக நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்.***

*உரையாடலுக்கு பின் பவுல் ஒரு,*

- ✓ *களப்பணியாளர்- மிஷினரி (a missionary),*
- ✓ *வேதபண்டிதர் (a theologian),*
- ✓ *சுவிசேஷகன் (an evangelist),*
- ✓ *மேய்ப்பர்,*
- ✓ *பிரசங்கி,*

- ✓ *போதகர்,*
- ✓ *ஒருங்கிணைப்பாளர்,*
- ✓ *தலைவர்,*
- ✓ *சிந்தனையாளர்,*
- ✓ *அரசியலாளர்,*
- ✓ *போராளி , மற்றும்*
- ✓ *இயேசு கிறிஸ்துவை நேசிப்பவர் மற்றும்*
- ✓ *அனைத்தையும் ஒரே சமயத்தில் வெளிப்படுத்தினார்.*

*பவுல் இயேசுவை தமஸ்கு சாலையில் சந்தித்தார்.*

***அப்போஸ்தலர் 9:19, பின்பு அவன் போஜனம்பண்ணி பெலப்பட்டான். சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சிலநாள் இருந்து.***

*என்ன நடக்கிறது?*

***அப்போஸ்தலர் 9:20, தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்.***

*அவர் யூதர்களின் வழிபாட்டு ஸ்தலத்திற்குள் (synagogue) சென்று இயேசுவே தேவ குமாரன் என அறிவிக்க துவங்கினார்.*

***அப்போஸ்தலர் 9:21-22, 21 கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா என்றார்கள். 22 சவுல் அதிகமாகத் திடன்கொண்டு,***

***இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான்.***

*யூதர்களின் வழிபாட்டு ஸ்தலங்களில் (synagogue) உள்ள யூதர்களுக்கு, அவர் கிறிஸ்தவர்களை துன்புறுத்துபவர் என்பதை அறிந்திருந்தனர்.*

***அப்போஸ்தலர் 26:19, "அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை" என அவர் கூறுகிறார்.***

***கலாத்தியர் 1:16, "தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டு."***

*மூன்று நாட்கள் குருடனாக இருந்த அவர் இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்பாட்டை இயேசு கிறிஸ்துவிடமிருந்தே பெற்றுக்கொண்டார்.*

*அவர் மூன்று நாட்கள் இயேசு கிறிஸ்துவால் உதவப் பெற்ற பின்னர் அவர் வெளியில் வந்து இயேசுவே தேவ குமாரன் என பிரசங்கித்து அதனை நிரூபித்தும் உள்ளார்.*

*அவரால் இவ்வளவு சீக்கிரம் அதனை எவ்வாறு நிரூபித்திருக்க முடியும்?*

*அவருக்கு பழைய ஏற்பாட்டை குறித்து நல்ல ஞானம் இருந்தபடியால், அவரிடம் அனைத்து ஆதாரமும் இருந்திருக்க வேண்டும்.*

*நீ இருளின் இராஜ்யத்தில் இருந்து மீட்கப்பட்டு ஒரு நொடியில் தேவனின் பிரிய குமாரனின் ராஜ்யத்தில் வைக்கப்பட்டுள்ளாய். அவரும் நமக்கு ஒரு புதிய இயல்பை கொடுத்துள்ளார். மெய்யான சுவிசேஷத்தால் தான் அதனை செய்ய முடியும்.*

*அபோஸ்தலர்களுக்கு இவை இயேசு கிறிஸ்துவின் வாயில் இருந்து நேரடியாக வந்த வெளிப்பாடாகும். நமக்கு மற்றும் அப்போஸ்தலருக்குபின்பு உள்ளவர்களுக்கு மற்றவர்களின் சுவிசேத்தின் பிரசங்கத்தால் இயேசுவின் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மேலும் நாம் அனைவரும் சாட்சியாளர்கள் மற்றும் நமது மூலமாக சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும்.*

*இந்த பன்னிரண்டு அபோஸ்தலர்கள் அசலான சுவிசேஷத்தை எப்படி கற்றுக்கொண்டார்கள்?*

*இயேசு கிறிஸ்துவின் வாயிலிருந்து கற்றுக்கொண்டனர்.*

*அப்படி தான் பவுலும் அந்த சுவிசேஷத்தை கேட்டார்.*

***அப்போஸ்தலர் 9: 18, "அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது,"***

*அதன் விளைவாக அவர், "அவன் கண்களிலிருந்தும் இருதயத்திலிருந்தும் மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்ததால் அவன் தேவ குமாரனை கண்டார்."*

***கலாத்தியர் 1:16, "தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டு."***

*ஆனால் அவர் ஏற்கெனவே இயேசுதான் தேவனுடைய குமாரன் என்று உறுதியாக நம்பி இயேசு மற்றும் தேவனின் இயல்போடு ஐக்கியமானார்.*

*இயேசுவை வெறுத்த பவுல் ஒரு சனப்பொழுதில், அவர் தான் தேவனின் குமாரன் என நம்ப ஆரம்பித்தார்.*

*அவருடைய மாற்றத்திற்கு முன்னர் அவர் வாழ்ந்த நிலையை பார்த்தால், அவரது மாற்றத்திற்கான எந்த மனித விளக்கமும் கொடுக்க முடியாது.*

*தேவன் அவரது வாழ்வில் எப்படி ஊடுருவினார் என்பதைவிட வேறு எதனையும் நீங்கள் எப்படி நம்ப முடியும்?*

*ஒரு நொடியில் அந்த மாற்றம் முழுமையாக முடிவுற்றது.*

*அந்த மாற்றத்திற்கு பின் அவருக்கு என்ன நடந்தது?*

***கலாத்தியர் 1:16**, "**உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்**."*

*அது தான் சாட்சியின் இதயம்!*

*இந்த நற்செய்தியை பெற நான் யாரிடமும் செல்லவில்லை. நான் உடனே மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணவில்லை. தமஸ்குவில் சிறிது காலம் இருந்தேன்.*

*நான் அனானியாவின் காலடியில் இருக்கவில்லை.*

*நான் கிறிஸ்தவ விசுவாசிகள் உள்ள ஒரு குழுவிடம் ஒன்றுகூடி, அவர்கள் எனக்கு இந்த விஷயங்களை விளக்கவில்லை.*

*நான் உடனே மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை கேட்கவில்லை.*

*நான் தமஸ்குவில் உள்ள மக்களிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம் என இறங்கவில்லை.*

***கலாத்தியர் 1:17**, **எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்**; **அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய்**, **மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்**.*

*நான் பிரசங்கிக்கும் இந்த நற்செய்தியான கிருபையின் நற்செய்தி, விருத்தசேதனமும் பிரமாணமும் அற்ற இந்த நற்செய்தியை நான் எருசலேமில் உள்ள அபோஸ்தலர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளவில்லை. நான் கடவுளிடமிருந்து*

*நேரடியாகவே இந்த கிருபையின் நற்செய்தியை பெற்றுக்கொண்டேன். அதனால் இது உண்மையான செய்தியாகும்.*

*நான் எருசலேமிற்கு செல்லவில்லை.*

*பவுலே, நீங்கள் எங்கு போனீர்கள்?*

***கலாத்தியர் 1:17**, "**அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய்**."*

*சினாய் தீபகற்பத்தின் (Sinai Peninsula) கீழ்ப்பகுதியில் உள்ள நபாடேன் அரேபியாவிற்கு (Nabataean Arabia) சென்றார்.*

*அநேகமாக தமஸ்குவிற்கு அருகே உள்ள அந்த வனாந்தரத்திற்கு பவுல் சென்ற்றிருக்கலாம்.*

*அவர் அங்கு தனியாக சென்றார்.*

*மெய்யான 12 சீஷர்கள் எவ்வளவு காலம் இயேசு கிறிஸ்துவிடம் இருந்து கற்றுக்கொண்டார்கள்?*

*மூன்று ஆண்டுகள்!*

*அப்போது அபோஸ்தலனாகிய பவுல் எவ்வளவு காலம் இயேசு கிறிஸ்துவிடம் இருந்து கற்றுக்கொண்டார்?*

*மூன்று ஆண்டுகள்!*

***கலாத்தியர் 1:18**, [18]**மூன்று வருஷம் சென்ற பின்பு, பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய்**, **அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன்**.*

*மூன்று ஆண்டுகளாக பாலைவனங்களில் இருந்து இயேசுவோடு ஒன்றி பேசிக்கொண்டிருந்தார்.*

*இந்த மூன்று ஆண்டுகள் என்பது, இயேசுவோடு அவருக்கான தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான பயிற்சியாகும்.*

*அப்போஸ்தலனாகிய பவுலால் எவ்வாறு இப்படிப்பட்ட ஆழமான இறையியல் வெளிப்பாட்டை எழுத முடியும் என்று நான் ஆச்சரியப்படுகிறேன்?*

*அவர் புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் பெரும்பகுதியை (13 நிருபங்கள்) மிகவும் அகன்ற வெளிப்பாட்டோடு எழுதுவதற்கான காரணம் என்ன?*

*இங்கே அதற்கான விடையை நீங்கள் கண்டடைவீர்கள்.*

*பவுல் தெய்வீக வெளிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நிறைய நேரம் செலவிட்டார். இந்த புத்தகங்களை எழுதும் போது அந்த தெய்வீக வெளிப்பாடு அவருக்கு மீண்டும் வழங்கப்பட்டது.*

*"மூன்று வருஷம் சென்ற பின்பு, நான் எருசலேமுக்குப் போய்,"*

*அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கிற விருத்தசேதனமும் கற்பனைகளும் இல்லாது, கிருபையை பற்றிய இந்த செய்தியை எருசலேமில் உள்ள பிரசங்கிகளிடம் இருந்து நீர் வாங்கி வந்தீர் என அபோஸ்தலனாகிய பவுலை குற்றம் சாட்டியவர்கள் கூறினார்கள்.*

*பவுல் அதற்கு இல்லை, நான் பெறவில்லை என பதிலளிக்கிறார்.*

*நான் வனாந்திரத்தில் மூன்று ஆண்டுகள் இருந்தேன். அதற்கு பிறகு தான் நான் எருசலேமிற்கு சென்றேன்.*

*பேதுரு தான் சபையின் மிகப் பெரிய பிரசங்கி. அவர் மிகவும் சக்திவாய்ந்த செய்திகளை அப்போஸ்தலர் புத்தகத்தின் 2,3,4,5,8 & 10 ஆகிய அதிகாரங்களில் கொடுத்துள்ளார்.*

*அதனால் அபோஸ்தலனாகிய பவுலுக்கு பேதுருவை பார்க்க வேண்டுமென விருப்பம் ஏற்பட்டது.*

*“எனக்கு அபோஸ்தலர்களின் தலைவராகிய பேதுருவை காண வேண்டும்.”*

*அது புரிந்து கொள்ளக்கூடியது.*

*அது சுலபமல்ல!*

***அப்போஸ்தலர் 9:26-30, [26]சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள். [27]அப்பொழுது பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக்கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக் கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்ட விதத்தையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான். [28]அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து; [29]கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே பேசித் தர்க்கித்தான்; அவர்களோ அவனைக் கொலைசெய்ய எத்தனம்பண்ணினார்கள். [30]சகோதரரோ அதை அறிந்து, அவனைச் செசரியாவுக்கு அழைத்துக்கொண்டுபோய், தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள்***

*பிரச்சனையின் காரணமாக தர்சுவில் (Tarsus) உள்ள தன்னுடைய வீட்டிற்கு அவர் அனுப்பப்பட்டார்.*

*நான் எருசலேமிற்கு பேதுருவை காண்பதற்கு மாத்திரம் சென்றேன். ஆனால் என்னால் அபோஸ்தலர்களிடம் செல்ல முடியவில்லை. அவர்கள் என்னை கண்டு அஞ்சினார்கள்.*

***கலாத்தியர் 1:19, “அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை.”***

ஏன்?

பெரும்பாலும் அவர்கள் சிதறி பிரசங்கித்தனர்.

ஆனால் அவர் இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபை பார்த்தார். அவர்தான் எருசலேமின் சபையின் தலைவர் ஆவார்.

அவர் என்ன கூற விரும்புகிறார்?

- நான் அபோஸ்தர்களினால் கற்றுக்கொள்ளவில்லை.
- அப்போஸ்தலர்களால் கற்பிக்கப்பட நான் அங்கு இல்லை.
- நான் பேதுருவோடு சுருக்கமாக இரண்டு வார காலத்திற்கு இருந்தேன்.
- முழு ஒழுங்குமுறை இறையியலையும் அந்த சுருக்கமான காலத்தில் பெற சாத்தியமில்லை.
- வேறு எந்த அப்போஸ்தலருடனும் நான் நேரத்தை செலவிடவில்லை, ஏனென்றால் அவர்கள் அங்கு இருக்கவில்லை.
- சீஷர்கள் முதலில் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை.
- அவ்வப்போது அவர்கள் என்னை நகரத்திலிருந்து துரத்தும் அளவிற்கு நான் தொடர்ந்து பிரசங்கிததேன்.
- நான் எந்த ஒரு மனித ஆசிரியரியரின் தயாரிப்பும் இல்லை!
- என் நற்செய்தி பரலோகத்திலிருந்து வந்தது.

ஒரு சாதாரண யூதனின் அர்ப்பணிப்பை பவுல் கொடுக்கிறார்!

***கலாத்தியர் 1:20, "நான் உங்களுக்கு எழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று தேவனுக்குமுன்பாக நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்."***

*எப்போதும் அதனை கூற மிகவும் கடினமாகத்தான் உள்ளது. ஏனென்றால், யாரோ ஒருவர் நீங்கள் பொய்யுரைப்பதாக குற்றம் சாட்டுகிறார்கள்.*

*அதன் வலி எப்படி என்று எனக்கு தெரியும் சிலர் என்னையும் அப்படி குற்றம் சாற்றியிருக்கின்றார்கள்.*

*நான் பொய்யுரைக்கவில்லை!*

*நான் உங்களிடம் உண்மையை தான் கூறுகிறேன்.*

*நான் இந்த துணிவோடு இயேசுவை குறித்து எருசலேமில் பிரசங்கிக்கிறேன். அவர் அவர்களிடமிருந்தோ அல்லது பேதுருவின் பாதங்களில் அமர்ந்தோ அல்லது அபோஸ்தலர்களிடம் இருந்தோ கற்றுக்கொண்டதாக அவர் சொல்லவில்லை என்பதை குறித்துக்கொள்ளுங்கள்.*

*அவர் மிகவும் வலிமையாகவும் தைரியமாகவும் பிரசங்கித்தார். அதனால் அவரைக் கொல்ல முயன்றார். மேலும் அபோஸ்தலர்களும் விசுவாசிகளும் அவரை பிடித்து சிசேரியவிற்கு (Caesarea) அவசராமக அழைத்துச் சென்று ஒரு படகில் அமர வைத்து தன்னுடைய வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.*

***கலாத்தியர் 1:21, பின்பு, சீரியா சிலிசியா நாடுகளின் புறங்களில் வந்தேன்."***

*முடிவாக, பர்னபா என்னை காணும்படி வந்தார்.*

*தர்சு (Tarsus) பட்டணமானது சிரியா (Syria) மற்றும் சிலிசியா (Cilicia) பகுதியில் உள்ளது.*

***கலாத்தியர் 1:22, மேலும் யூதேயாதேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன்.***

*நான் சிறிய காலத்திற்கு எருசலேமில் இருந்தேன். ஆனால் எருசலேமுக்கு வெளியில் உள்ள மற்ற பகுதிகளான யூதேயா (Judea) போன்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கும் அங்குள்ள சபைகளுக்கும் என்னை தெரிந்திருக்கவில்லை. யாரும் என்னை கண்டது கூட இல்லை. நான் வேறெங்கும் சென்றதுகூட இல்லை.*

*பவுல் கர்த்தருடைய வாயிலிருந்தில்லாமல் வேறு எந்த முறையில் இதைக் கற்றுக்கொண்டார் என்ற எண்ணத்திற்கு பதிலாக அவர் எல்லா விதமான தன்னுடைய சுயசரிதையையும் வாதத்தையும் வைக்கிறார்.*

***கலாத்தியர் 1:23, முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறானென்பதை மாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து.***

*அவர்களுக்கு என்னை தெரியாது. அவர்கள் என்னை கண்டதுமில்லை. ஆனால் அவர்கள் என்னை பற்றிய சுயசரிதையை அறிந்துள்ளார்கள்.*

*மேலும் நான் ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களை எதற்கு துன்புறுத்தினேனோ அதே செய்தியை தற்போது பிரசங்கிப்பதால், அவர்கள் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.*

*பவுல் இங்கு தன்னுடைய முழு சுயசரிதையையும் தருகிறார். மேலும் அவர் அதனை கொண்டு மனிதர்கள் தனக்கு கற்பிக்க வேண்டிய அவசியமே கிடையாது என்று காட்டுகிறார்.*

*அவர் மீண்டுமாக சிரியா (Syria) மற்றும் சிலிசியாவிற்கே (Cilicia) சென்றார். யூதேயாவில் உள்ள சபைகள் அவரை அறிந்திருக்கவில்லை.*

*அவர் மிகவும் சுருக்கமான காலத்திற்கு எருசலேமில் உள்ள மக்களை சந்திக்கிறார்.*

*அவர் திரும்பவும் சென்றுவிட்டார்.*

*அவர் எவ்வளவு காலம் அங்கு தங்கி பிரசங்கித்தார் என்பதை நீங்கள் அறிவீர்களா?*

***கலாத்தியர் 2:1, "பதினாலு வருஷம் சென்றபின்பு, நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்."***

*14 ஆண்டுகள் என்ன செய்து வந்தார்?*

*அவர் இன்னும் எருசலேமில் உள்ள தலைவர்களிடம் இணைக்கப்படவில்லை.*

*இந்த செய்தி அவருக்கு அவர்களிடம் இருந்து வரவில்லை.*

*உலகின் அந்தப் பகுதிகளில் பவுல் 14 ஆண்டுகள் பிரசங்கித்தார். 14 ஆண்டுகளுக்கு பிறகு தான் திரும்பிச் சென்றார்.*

*கலாத்தியாவிலுள்ள சபைகளில், தான் தேவனுக்காக பேசுகிறார் என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமென பவுல் விரும்பினார்!*

*பவுல் இந்த செய்திகளை தான் பிரசங்கிக்கும் போதும் எழுதும் போதும் தேவனிடமிருந்து நேரடியாக பெற்றுக் கொள்கிறார்.*

***கலாத்தியர் 1:11, மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின் படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.***

*இப்போதாவது நாம் புரிந்துகொள்கிறோமா?*

*பேதுருவிற்கு அது தெரியும்.*

***2 பேதுரு 3:15-16,** [15]**மேலும் நம்முடைய கர்த்தரின் நீடியபொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்;** [16]**எல்லா நிருபங்களிலும் இவைகளைக்குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.***

*பேதுரு என்ன சொன்னார்?*

*பவுலும் அதைதான் வேதாகமத்தில் எழுதியுள்ளார்!*

*பவுலின் எழுத்துக்கள் வேதாகமத்தின் மீதமுள்ளவைகளோடு ஒத்துப்போகிறது.*

***2 தீமோத்தேயு 3:16-17,** [16]**வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,** [17]**அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது.***

*அனைத்து வேதவாக்கியங்களும் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் மூலம் தூண்டப்பட்டபோது பரிசுத்தவான்கள் கடவுளுக்காக பேசினர்.*

*இது பரலோகத்திலிருந்து வந்ததால் நீங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளலாம். அபோஸ்தலனாகிய பவுல் எழுதிய 13 நிருபங்களிலும் இது தான் மிக விரிவான விளக்கவுரை ஆகும். இது தான் உண்மையான சுவிசேஷம். இது மனிதர்களிடம் இருந்து பெறப்படவில்லை, பரலோகத்தில் இருந்து பெறப்பட்டது. எந்தவிதத்திலாவது அந்த நற்செய்திக்கு மாற்றம் ஏற்பட்டால், யார் அதனை கடத்துகிறார்களோ அவர்களுக்கு அது சாபமாகும். இது தான் அவருடைய அபோஸ்தலருக்கான நற்சான்றாகும்.*

*தேவனுடைய வார்த்தை பிரகாசமாக இருக்கிறது. அதனுடைய உண்மையான மகிமை ஒவ்வொரு பக்கத்திலும் மிண்ணுகிறது. வேதாகமத்தை புரிந்துகொள்வது என்பது ஒரு வகையான இயற்கைக்கு மாறான அனுபவமாகும்.*

*நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது, நாம் பரலோகத்தோடு ஒரு சந்திப்பைப் பெற்றிருப்பதைப் போல் உணர்கிறோம்.*

*அவர்கள் ஒரு வகுப்பில் உட்கார்ந்திருக்க பரிசுத்த ஆவியானவரால் போதிக்கப்பட்ட ஒரு உணர்வை உணர வேண்டும்.*

*நாம் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதைப் போல் உணர வேண்டும்.*

*வேதாகமத்தின் அதிசயங்களும் வேதாகமத்தின் பெருமைகளும் தேவனுடைய சொந்த மகிமையை ஊடுருவுகின்றன.*

*வேதவாக்கியம் அந்த சத்தியத்தின் வெளிப்பாடு ஆகும்.*

*"கடவுள் தான் பாவிகளை நியாயந்தீர்க்கிறார்" என பவுல் அறிவிக்கும் போது இதனை கூறுகிறார். இது தான் இரட்சிப்பு.*

*இது சம்பாதிக்க முடியாத ஒரு பரிசாகும்.*

*அதை நாம் பெற்றுக்கொண்டோம்.*

*கிருபை என்பது நமக்கு தகுதியில்லாத பரிசாகும். அதனை நாம் விசுவாசம் என்ற ஒரு சுலபமான வேலையின் மூலம் அடைகிறோம்.*

---

***"நான் இயேசுவை விசுவாசிக்கிறேன்! என்னை இரட்சியும்" என பாவிகள் கூறுகின்றனர்.***

***இது தான் தேவன் கொடுக்கும் பரிசு மேலும் இதனையே பாவிகளும் பெற்றுக்கொள்கின்றனர்.***

---

*மாற்றுவிக்கும் கிருபை!*

*இது தான் பரிசுத்த ஆவியானவரின் வேலை.*

*இது தான் தேவனின் தெய்வீக திட்டம் மற்றும் நோக்கம் ஆகும்.*

*அபோஸ்தலனாகிய பவுலை தேவனே தேர்வு செய்துள்ளார்.*

*தேவன் அவரை தம்முடைய நோக்கத்திற்காக அழைத்துள்ளார்.*

*தேவன் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் ஒளியின் மகிமையை உலகிற்குக் கொண்டுவருவதற்காக அவரை வேலையில் அமர்த்தியுள்ளார்.*

*உங்களுக்கும் அதே சரிதை உள்ளது!*

**தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்,**

***அழைக்கப்பட்டவர்கள்,***

*இந்த உலகிற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.*